


Printed at the 'Reliance Press, Coimbatore.

## பாத்திரங்கள்.

| | | |
|---|---|---|
| ராஜா M. G. தண்டபாணி | ... | சூரன் |
| M. V. மணி | ... | வீரவாகு |
| மாஸ்டர் P. S. மணி (5 வயது) | ... | பாலஸ்கந்தன் |
| ,, முருகேசன் (10 வயது) | ... | தண்டபாணி |
| ,, நாராயணன் | ... | சுப்பிரமணியர் |
| ராமையசாஸ்திரி | ... | இடும்பன் |
| ஞானமணி | ... | நாரதர் |
| செல்வமணி | ... | சயந்தன் |
| V. V. S. மணி | ... | பானுகோபன் |
| T. R. குப்புசாமி பிள்ளை | ... | பரம சிவன் |
| கோவிந்தராஜுலு நாயுடு | ... | விஷ்ணு |
| சவுடப்பா | ... | பிரமன் |
| ஆறுமுகம் | ... | இந்திரன் |
| வசந்தா | ... | வள்ளி |
| சுந்தராம்பாள் | .. | தெய்வயானை |
| தனலக்ஷிமி | ... | பார்வதி |
| சுசீலாதேவி | ... | இந்திராணி |
| சீதாலக்ஷிமி | ... | அசமுகி |

வைத்தீஸ்வரன் கோயில் மீனாக்ஷிசுந்தர நட்டுவனார்
நடன கோஷ்டியார் நர்த்தனம்.

கதை, வசனம், பாட்டு :–
L. நஞ்சப்ப செட்டியார்.

பாகுபடுத்தி நடத்தியவர் :–
H. S. மேதா.

படப்பிடிப்பு :–
J. S. படேல்.

ஒலிப்பதிவு :–
K. பிரசாத்.

ரசாயனமுறையில் பாகுபடுத்தியவர் :–
K. சுந்தரம்.

சங்கீத உபாத்தியாயர் :–
வித்வான் கோவிந்தராஜுலு.

ரிலையன்ஸ் பிரஸ், கோயமுத்தூர்.

வெற்றிவேல் துணை

# ஸ்ரீ கந்த லீலா.

தேவர்களெல்லாம் திருக்கைலாயத்திற்கு சென்று சூரபத்மனுடைய கொடுமைகளைக்கூறி முறையிடுகிறார்கள். சிவபெருமான் அவர்களுடைய துன்பங்களை சீக்கிரம் ஓர் குமாரனை அளித்து நிவர்த்திப்பதாக கூறுகிறார். சூரபத்மன் இந்திரனையும், இந்திராணியையும் பிடித்து வரும்படி உத்திரவிடுகிறான். இதைக்கேட்ட வாயு இந்திரனுக்கு அறிவிக்க இந்திரனும், இந்திராணியும் கிளிரூபமாக மாறி ரகசியமாய் சீர்காழியை அடைகிறார்கள். அங்கு வந்து தேவர்களெல்லாம் இந்திரனைக்கண்டு வருந்த இந்திராணியை வீரமாகாளன் காவலில் விட்டுவிட்டு இந்திரனும் மற்ற தேவர்களும் கைலாயத்திற்கு சென்று சிவபெருமானுடைய வாக்குத்தத்தத்தை நினைப்பூட்டுகிறார்கள். சிவபெருமான் உடனே ஆறுமுகங்களுடன் தோன்றி, ஆறு நெற்றிக்கண்களிலிருந்தும் நெருப்புப் பொறிகள் வெளிவர அதன் வெப்பத்தை தாளாது பார்வதியம்மையார் பயந்து ஓட தன்கால் சிலம்பினின்று நவமணிகள் கீழே விழுகின்றன. விஷ்ணு முதலாயினோர் வேண்டுகோளுக்கிணங்கி வெப்பத்தை தணித்து அத்தீப்பொறிகளை அக்னியிடம் கொடுக்க அவர் சரவணப் பொய்கையில் சேர்ப்பிக்கின்றனர், அங்கு அப்பொறிகள் குழந்தைகளாக மாறி 6 கார்த்திகைப் பெண்களால் வளர்க்கப்படுகின்றனர். இப்படியிருக்க கைலாசத்தில் பார்வதியம்மையார் சிலம்பினின்றும் சிந்திய நவரத்தினங்களை சிவபெருமான் உற்றுநோக்க அதினின்றும் நவசக்திகள் தோன்றி வீரவாகு முதலிய நவ வீரர்களை பெற்றெடுக்கிறார்கள் சரவணையில் சுப்பிரமணியர் தோன்றியதும், சூரபத்மன் துற்கனவு காண்கிறான். பார்வதி பரமேஸ்வரர் சரவணப் பொய்கைக்கு சென்று அங்கு அம்மையார் ஆறு குழந்தைகளையும் ஒன்று சேரத்தழுவி எடுக்க ஆண்டவர் ஆறுமுகமும், பன்னிரு கரமும் ஒருடலுமாய் விளங்க அம்மையார் அவருக்கு கந்தன் எனப் பெயரிட்டு அவரை கயிலைக்கு எடுத்து செல்கிறார்கள். இச்சமயத்தில் இந்திராணிமேல் மோகம் கொண்ட சூரன் குடியில் மூழ்கிக் கிடக்கிறான், அச்சமயம் தன் தங்கை மக்கள் வில்வலன், வாதாபி அகஸ்தியரால் கொல்லப்பட்டதை கேட்டதும் கோபம் கொண்டு ரிஷிகள் வர்க்கத்தையே நாசமாக்கும்படி உத்திரவிடுகிறான். இச்சமயம் முருகன் மண் விளையாட்டு முதலிய திருவிளையாடல்களைச் செய்கிறார். சூரபத்மன் தங்கையாகிய அசமுகி சீர்காழியில் இந்திராணியை கண்டதும் அவளை பலாத்காரமாய் தூக்கிச்செல்ல முயன்றதால், வீரமாகாளன் அவள் கரத்தை துண்டிக்கிறான். அசமுகி சூரபத்மனிடம் தர்பாரில் முறையிட பானுகோபன் இந்திரகுமாரனாகிய சயந்தனை சிறைப்படுத்துகிறான்.

திருக்கயிலாசத்தில் கந்தனும் கணபதியும் தம் பெற்றோர்களிடம் நாரதர் கொண்டுவந்த மாதுளம் பழத்திற்காக வாதாட,

பூலோகத்தை சுற்றி வந்து எவன் முதல் முதலில் தம்மை தொடுகின்றானோ அவனுக்கே அப்பழம் உரியது என்று சிவன் கூற, கந்தன் மயிலின்மேலேறி பறக்கிறார், கணபதியோ தம் பெற்றோரை வலம் வந்து கனியைப்பெறுகிறார், கந்தன் திரும்பி வந்து கணபதி கையில் அக்கனி இருப்பது கண்டு பொறாமைகொண்டு தன் ஆடையாபரணங்களை யெல்லாம் கழற்றி எறிந்துவிட்டு தண்டபாணியாய் புறப்படுகிறார். போகும் வழியில் சத்திகிரி, சிவகிரிகளை காவடியாகத் தூக்கி செல்லும் இடும்பனைக்கண்டதும் ஓர் இளவரசனாக மாறி அவனை பழனிக்கு போகும்படி வழிகாட்டுகிறார். இடும்பன் பழனியை அடைந்ததும் காவடியின் பாரம் அதிகரிக்க அதைத்தூக்க முடியாமல் திகைத்து நிற்க மலைமேல் நின்ற குமரன் சிரித்து சுயரூபம் காட்ட இடும்பன் பணிந்து தொண்டனாய் ஏற்றுக்கொள்ளப்படுகிறான். பார்வதி பரமேஸ்வரர் பழனிக்குச் சென்று குமரனை தேற்றுகிறார்கள். கந்தன் பிரணவத்தின் பொருள் கூறாத பிரமனை சிறையிலிடுகிறார். மாட்டுப்பையல்போல் மாறுவேடங்கொண்டு ஔவையின் கர்வத்தை அடக்குகிறார். பிரணவப் பொருளை தன் தந்தை சிவபெருமானுக்கு உபதேசிக்கிறார்.

தேவர்களெல்லாம் மறுமுறையும் கயிலைக்குச் சென்று சிவபிரானை வேண்ட எம்பெருமான் தமது திருக்குமரனை சூரனுடன் போர் செய்து ஜெயித்து தேவர்களை சிறை நீக்குமாறு அனுப்புகிறார். அம்பிகை சத்திவேலைத்தந்து ஆசீர்வதித்து அனுப்புகிறாள். கந்தப்பெருமான் பூதகணங்களுடன் சென்று வீரவாகுவை ஏவி தாரகனை சம்ஹரிக்கிறார். சூரனிடம் வீரவாகுவை தூதனுப்பி அவன் இணங்காததால் அவனுடன் போர் செய்து கடைசியில் தன் வேலை விடுத்து அவனை இருபிளவாகப் பிளக்க அந்த இரு கூறுகளும் மயிலாகவும், சேவலாகவும் மாறி தன்னருள் நோக்கி முன்வர இரண்டையும் தன்வாகனமாகவும் கொடியாகவும் ஏற்றுக்கொள்ளுகிறார். வீரவாகுவை அனுப்பி தேவர்களை சிறைநீக்குகிறார், பின்னர் இந்திரனுடைய வேண்டுகோளுக்கிணங்கி தெய்வயானையை திருப்பரங்குன்றத்தில் விவாஹம் செய்துகொண்டு திருத்தணிக்குச் செல்ல அங்கு நாரதரால் வள்ளியின் அழகை கேள்வியுற்று கழுகாசலம் சென்று வள்ளியை மணந்துகொண்டு திருத்தணிக்குவர நாரதருடைய தூண்டுதலால் வள்ளிக்கும், தெய்வயானைக்கும் சக்களத்தி போராட்டம் நடக்கிறது. பின் முருகப்பெருமானால் தாங்களிருவரும் முன் ஜென்மத்தில் சகோதரிகள் என்று அறிந்ததும், ஒருவரையொருவர் தழுவி சந்தோஷிக்கிறார்கள். வள்ளி தெய்வயானை சமேதராய் முருகப்பெருமான் காட்சி.

மங்களம்!

---

குறிப்பு:— "கந்தலீலா" ஓடியன் கிராமபோன் பிளேட்டுகள் சென்னை சரஸ்வதி ஸ்டோர்ஸில் வெளிவரும்.

# வெற்றிவேல்.

## ஸ்தோத்திரம்.

ஸ்ரீதர மருகனே சிவகுருநாதா
சரவண நீதா திருவருள்தா
தேவ மருதவரை திகழ் வடிவேலா
திரிபுர தகன சங்கரனருள் பாலா
கோவைபுரி பிரிமியர் சினிடோனே
குவடுறு சுடரெனப் பொலிகருள்வோனே
கரங்தொழும் சிரம்படும் பதங்கொளும் (ஸ்ரீதர)

துமினே முஜகோ—என்ற மெட்டு.

இந்திராணி: மதியே எனை நீ வாதிப்பதேனோ
மாரன் கணைக்கினி நான் தப்புவேனோ
இந்திரன்: மோக மனோகரி நானே வந்தேனே
இந்திராணி: மேகமே வாகன போக பூமானே
இந்திரன்: முத்தமிடாயோ மாமயலானேன்
இந்திராணி: மித்திரை நானே மோசஞ் செய்வேனோ
இந்திரன்: மாது நீ பாராய் என்னுசை தீரவே
இந்திராணி: மாமணவாளா உன்னுவல் தீர்ப்பேனே
இருவரும்: மகிழ்வாய் நாமிருபேரு மாகம
மதராஜசுக போக முறுவோமே
மானிலத்தே எவர் எமக்கு ஒப்பாமே

கார்த்திகைப்பெண் :— நீலாம்புரி.

கண்ணே என்கற்பகமே கனகமய சின்மயனே
தண்ணேர் கமலமிசை துயில்பவனே கண்வளராய்
விண்ணோர் சிறைதவிர்க்க விடையேறி யருள் மகனே
உண்ணுமுலையுமையின் ஊனுயிரே கண்வளராய்

நாத நாமக்கிரியை.

தண்டாமரை நிறையுஞ் சரவணையிலுற்பவனே
கண்டோர் மனங்கவருங் கதிர்காமா கண்வளராய்

மால்கோஸ்.

திண்டோளவுணரையே தீர்க்க வந்த என் துரையே
உண்டோ உனக்கிணையே உத்தமனே கண்வளராய்

பார்வதி : விருத்தம்.

இராகம்—மனோலயம்.

கண்ணே வருக கண்ணின் மணியே வருக சுப்பிர
மண்ய குமரா வருக விண்ணவர்தம் சிறை நீக்க
கண்ணுதலில் தோன்றிய கற்பகமே வருக எந்தன்
எண்ணமிசை குடிகொள் ஏந்தலே வருக வருக.

தேவர்கள் :

இராகம்—மோஹனம் தாளம்—ஏகம்.

சரவண வாவி மேவு மாதி தேவனே
திதிசுதர் கிளை யழிந்ததுவே
சதி செயுமர சொழிந்ததுவே
சுரர் மதிகளிப்படைந்ததுவே
சுக முறு நிலையடைந்தனமே (சரவண)

தேவ தேவ சிவகுமாரா தினமு முனது தரிசனமே
திடமுடன் பெற மலரடிபணிவோம் (சரவண)

சூரன் : இராகம்—ப்யாக். தாளம்—ஆதி.

போதும் நீ பேசாதே போ போ
புதுமையே உனதக நிலையது பேதாய்
அதமி நீ தவ முனிவருடைய தூதா (போ)

பத்மகோமளை :

நாதா நீர் நவில்வது ஞாயமகாதே
நலமிகு முனிவரை வதைப்பது தீதே
பாதகச் செயலிது வாகு மண்மீதே

சூரன் : பரிகசமோ புரிய வந்தாய்
சரி சரி நீ (போ)

பார்வதி : பிள்ளைத்தமிழ்.

இறுகு மறை ஞாணி னிப்பூட்டே
னிலங்கு மகர குண்டலத்தை
எடுத்துக் குழையின் மீதணியேன்
இனியுன் முகத்துக் கேற்க வொரு
சிறுகுந் திலதந் தனைத் தீட்டேன்
திருக் கண்மலர்க்கு மை யெழுதேன்
செம் பொற் கமலச் சீரடிக்குச்
சிலம்பு திருத்தே னெறித்து விம்மி
மூறுகு முலைப் பாலினி தூட்டேன்
முகம்பார்த்திருந்து மொழி பகரேன்
முருகா வருக சிவசமய
முதல்வா வருக திரைகொழித்து
மறுகு மலைவாய்க் கரை சேர்ந்த
மழலைச் சிறுவர் வருகவே
வளருங் களபக் குரும்பைமுலை
வள்ளி கணவா வருகவே.

பாலஸ்கந்தன் :

அன்னையே என்னையே அழைத்திட லாகுமோ
ஆடும் இவ்வேளையிலே
அறுசுவை உண்டியோ
அழகிய பொருளோ
அளித்தென்னை அழைக்கினும் நான்
அடியெடுத்தகலேன் (அன்னை)

நாரதர் :

இராகம்—ஹம்சாநாதம். தாளம்—ஆதி.

பல்லவி.

சதாசிவ சந்திர சேகரா
சாமகானப்ரிய சிவசங்கரா

அனுபல்லவி.

பிதாமகன் பதமீந்தவா
பரமகருணாகர சச்சிதானந்தா (சதா)

சரணம்.

இதோபதேச இலிங்க மூர்த்தி
இமையவட்கிட மளித்த மூர்த்தி
அதோ முகமொ டைம்முகம் சேர்த்தி
ஆறுமுகனை யளித்த ஏறூர்ந்த மூர்த்தி (சதா)

இடும்பன் :

மஞ்சுநிகர் குந்தளம்—என்ற மெட்டு.

கஞ்சமலர்த்தாளுடைக்கந்தா
கங்கையின் மைந்தா
செங்கதிர் காந்தா
கார்த்திகேயக் குறிஞ்சியின் வேந்தா—அருங்
கீதமோடுனே யோதி போற்றிடும்
பேதை யெந்தனே யாதரி என்
கூவியழுதாலும் மனமுருகா
கடம்பனே குகா இடும்பன் நான் முருகா
காருண்யமில்லையோ சண்முகா.

கந்தன் :

இராகம்—பந்துவராளி தாளம்—ஆதி.

பல்லவி.

சிவகுருபரமஹதேவா—சோமா
சதாசிவ பூத கணதிப மூவா (சிவ

அனுபல்லவி.

சின்மயதேஜோ சிவப்பிரகாசா போற்றி
சுபகர ஞான குருவுபதேசா போற்றி (சிவ

சரணம்.

சுதனும் எனை யிங்கு நாடி
சரணலய தரிசன மளித்த அழலாடி
கதி இது போதுமக் காவதென்ன வேண்டி
தயைபுரிவீரெந்தன் தந்தையே சுடலையாடி (சிவ

மாட்டுக்காரப்பையல் :

கட்டைபொம்மன்—மெட்டு.

1. மருதமலையடி வாரத்திலே
மாட்டுக் கூட்டத்தை நான் மேய்க்கையிலே
நாட்டுப்புறத்துப் பெண்டுகள் ரெண்டு
வீட்டில் வந்து என்னைக் கேட்டனராம்

2. ரோட்டோரம் வீட்டுக்காரி
ரோஜாப்பு சேலைக்காரி
காதோரம் கொண்டைக்காரி
என் தங்க ரத்தினமே
கை எளைக்க கெட்டிக்காரி
என் பொண்ணு ரத்தினமே

கந்தன் ;

இராகம்—செஞ்சுருட்டி. தாளம்—ஏகம்.

காட்டினடுவினிலே கால் நடை மேய்க்கையிலே
ஓட்டமாயோடி வந்தேன்—கனியே
மாட்டிடைப் பையல் தனியே

நாட்டமுன் மேலுறவே நீள்தருமேலேறியே
மேட்டிமையாய் நின்றேன்—கனியே
வாட்ட வென் பசிப் பிணியே

ஔவை :

கிரிதர—மெட்டு.

சுயரூபமுடன் வரலாகாதா—செந்தில் மைந்தா நின்

அறிவை மயக்கி யகந்தை யழிக்கவோ
மாறிச்சிறுவனாய் வந்தீர் (சுய

தேவர்கள் துன்பமே நீங்க கபாலி
தாரை யுதித்த முதல்வா
பாவியெனைப் பரிபாலித்துன்பாதமே
பேதைக்கருள லாகாதா (சுய

சுப்பிரமணியர் : விருத்தம்.

இராகம்—காம்போதி.

அன்னையே போற்றி அறிவெனும் அமுதூட்டிய எந்தன்
முன்னையே போற்றி முழுமுதற் கடவுளேவல் முற்ற
தன்னையே நிகர்த்தயிச் சத்திவேல் தந்த தாயே போற்றி
உன்னையே நாடி உனதடி சரணம் போற்றி போற்றி

சயந்தன் :

இராகம்—புன்னாகவராளி. தாளம்—ஆதி.

திரிபுர தகன தாரி—சம்போ
தீன தயாபரனே—அரனே
சிறுவன் தனயனலவோ தேவா என்
பருவரலோட்டவே நிதமும் பணியும்
சேயன் படுந்துயர் அறிந்திலேயோ
சந்த்ரசேகர சடாதரா (திரி

சூரன் : விருத்தம்.

அந்தமு மா தியுமிலாத ஆனந்த மூர்த்தியே
அடிய னேற்குன் தரிசன மளித்த தேவே போற்றி
முன் றொரு நாள் ப்ரபாகரர்க்குச் சூரன் பதுமன்
மகவிரண்டாய்த் தோன்றிகுறு முனிவன் கூறும்
நுந்தமூர்தியுங் கொடியுமாஞ்சே வல்மயில் பெருமையே
நாம்கேட்டுஅப் பதவிவேண்டி நினைப்பூசித்தோம்
வந்தமரரே குறைகூற அசுரராய்ச் சபித்தீர்
வந்தாட் கொள்ளுநாளின்றே நின்றருள் வேலோய்.

தெய்வயானை :

இராகம்—மாயாமாளவ கௌளை. தாளம்—ஆதி.

வந்தாட்கொள்ளலாகாதா—சண்முக நாதா
வன்ன மயில் தன்னிலேறி
கன்னி என் கவலை தீர (வந்

செந்தமிழ் குமரனே சேவற்கொடியவனே
மந்த்ர சடாக்ஷரனே மனங்கவர் மனோகரனே
மணவாளா கஞ்சமலர்த்தாளா
மருவுஞ்சீலா மரகத வடிவேலா (வந்

வள்ளி : இராகம்—கானடா தாளம்—மிஸ்ரம்.

மனத்தின்பங் கொடுத்தன்பன்
சினத்துன்பங் களைத்தென்றும் அருள்வோனே
வனத்திங்குன் னடித்தொண்டின்
மனப்பண்பிங் குடைப்பெண்டின் மயல்தீர
அடுத்தெந்தன் இடர்த்துஞ்சும்
படிக்குந்தன் திருத்துண்டம் அருளாயேல்
இழிப்பென்னும் பழிக்கொண்டிங்
குழப்பின்றென் மொழிக்குன்றிங் கழிவேனே.

வள்ளி : இராகம்—செஞ்சுருட்டி. தாளம்—ஆதி.

ஆறுமுக வேலன் கந்தன்—அவர்
நீறணி மஹாதேவன் சொந்தம் பந்தம் அனந்தம் (ஆறு

துஷ்ட நிக்ரஹ தூய சிஷ்ட ரக்ஷகனுய
சீலன் தயாளன் குணாளன் உமைபாலன் (ஆறு

சரவணையிலுதித்தோன் சதுர்முகனை ஜெயித்தோன்
நாதன் வினோதன் அனாதன் குணாதீதன் (ஆறு

அமரர் சிறை நீக்தோன் அசுரரை அழித்தோன்
தீரன் குமாரன் உதாரன் மனோமாரன் (ஆறு

செந்தமிழ்ப் புலவோன் என் சிந்தையிலுறைவோன்
கேளும் இந்நாளும் எந்நாளும் வந்தேயாளும் (ஆறு

நாரதர் :

விருத்தம்—இராகம் காபி

கொண்டலே போற் கருங்குழலாள் கூறிய வாள் நுதல்
கெண்டையே நிகர்த்த விழியாள் கண்டினு மினியதோர்
பண் புடைக்கிள்ளையின் மொழியாள்பொற்புடையன்னமே
பின்னடையும் நன்னடையாள் பூவுலகதனிலும்
விண்ணுலகத்திலுமில்லா அழகையே உருக்கி
வார்த்த சித்திரப்பதுமையாமவள் முகவடிவு காண நின்
கண்களீராறும் போதாது கந்தா சொந்த
காரிகையாளவளை நீயாட் கொள்ளுவாயே!

வள்ளி : ஆ ஜஹமே—என்ற மெட்டு.

மா ஜெகமீதினிலே சுகமேது
மணாளரை மடந்தையர் தன்மனமே
வெறுப்புறும் போது
வயதுறுமெனக்கே வயோதிகனோபதி
வாழ்வின்சுகமே பெறுவேனோ—நானே (வாழ்)

சுப்ர : முனமே நீயே பக்தி பூர்வமாய்த் தொழுதேத்தியதே [யாரே

வள்ளி : மஹா தேவனார் பால வேலரே
வழிபடுந் தேவரே பாரீர்

சுப்ர : ஆரணங்கே ஆத்ம ஞானியனை—நீ
அடைவதுவே எளிதாமோ

வள்ளி : அருளெனுங் குணமே யாமுருவாமே
அடியாள் முறை வீண் போமோ

சுப்ர : கோதாய் நீ கருதும் மணாளனே
இதோ இங்குளன் காண்பாயே

வள்ளி : குருபரனே நின் காட்சிலைய முனம்
கடாட்சிக்க லாகாதா

சுப்ர : ஒளிமுக வதனியே யறிவேன் நான்
உளத்தின் திடம் சோதித்தேனே

சுப்ர : }
வள்ளி : }
ஒருயிர் போலினி நாமிருபேரும்
உலாசமாய் ஒத்து மனமின்புறவே
மருவி வாழ் வோமே

தெய்வயானை :

### விருத்தம்—ஆனந்தபைரவி.

செந்தமிழ் செல்வமணியே சிவஞானச் செழுங்கனியே
சீராய் எந்தன்
சிந்தை யுறை யென் துரையே சிறுமியா மெனையகன்றே
தனியே விட்டு
எந்தை நீ ரேகுவதழகோ இது உமக்கே தான் சரியோ
எங்குமிவ் வேழை
சொந்த மனை யாளலவோ சீருயிற் நீத்த உடல் போல்
தவிக்கின்றேனே.

### தந்ததனன, தனனா, தன்னதன

செந்திலமரு முருகா சிவகுமா
சிந்தை யழியு மென்தா குலமகல
வந்து தரள நகையோ டினியமொழி—பகராயோ

எந்த சுகமு நினையா ரரிவையரே
சொந்த கணவ ரருகே சரசமொடு
கொஞ்சி குலவு வதையே கருதுவரென்—குருநாதா.

### வணக்கம்.

ஏறுமயி லேறிவிளை யாடு முக மொன்றே
ஈசருடன் ஞானமொழி பேசு முகமொன்றே
கூறு மடியார்கள் வினை தீர்க்கு முகமொன்றே
குன்றுருவ வேல் வாங்கி நின்றமுக மொன்றே
மாறுபடு சூரரை வதைத்த முகமொன்றே
வள்ளியை மணம் புணரவந்த முகமொன்றே
ஆறுமுகமான பொருள் நீ யருளல் வேண்டும்
ஆதியருணா சல மமர்ந்த பெருமாளே.

### மங்களம்.

---

ரிலையன்ஸ் பிரஸ், கோயமுத்தூர்.